# விஜயபாரதம்

மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY

பிலவ, வைகாசி - 23 ஞாயிறு 06.06.2021 மலர் - 2, இதழ் - 61


## சேவைத்துளிகள்



சேவாபாரதி இன்டர்நேஷனல் மற்றும் சேவாபாரதி தமிழ்நாடு இணைந்து, குரோம்பேட்டை அரசு மருத்துவமனைக்கு 3 ஆக்சிஜன் செறிவூட்டிகளையும், மதுராந்தகம் அரசு மருத்துவ மனைக்கு 2 ஆக்சிஜன் செறிவூட்டிகளையும் வழங்கியது. செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ஜான்லூயிஸ் அவற்றைப் பெற்றுக்கொண்டார்.



சேவா தினத்தை முன்னிட்டு பா.ஜ.கவினர் நடைத்திய ரத்த தான முகாம்.

விழுப்புரம் சங்கர மடத்தில் நடைபெற்ற நான்காவது கொரோனா தடுப்பூசி முகாம்.





சேவாபாரதி மற்றும் நீலகிரி சேவாகேந்திரம் சார்பில் நடைபெற்று வரும் சேவையின் ஒரு பகுதியாக கொரோனா ஊரடங்கு நேரத்தில் மக்களுக்கு உணவு வழங்கப்படுகிறது.

கோவை, மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனைக்கு ஆர்.எஸ்.எஸ், சேவாபாரதி சார்பில் ஆக்ஸிஸின் செறிவூட்டிகள் வழங்கப்பட்டன.



கோவை, மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனைக்கு ஆர்.எஸ்.எஸ், சேவாபாரதி சார்பில் கபசுரக் குடிநீர், ஹோமியோபதி மாத்திரைகள் வழங்கப்பட்டன.





காரைக்கால் தலத்தெரு, வடமட்டம், கோட்டுச்சேரி பகுதிகளில் ஆர்.எஸ்.எஸ், சேவாபாரதி சார்பாக கபசுரக் குடிநீர் வழங்கப்பட்டது.

திருச்சி மாவட்டம், மேலகல்கண்டார் கோட்டை, பெரியார் தெரு, குமரன் தெரு பகுதிகளில் ஆர்.எஸ்.எஸ், சேவாபாரதி சார்பாக கபசுரக் குடிநீர் வழங்கப்பட்டது.





கன்னியாகுமரி மாவட்டம், பைங்குளம் மண்டல் புதுக்கடை பகுதியில் கொரோனாவால் காலமான பகவதியம்மாள் என்பவரின் உடல் ஆர்.எஸ்.எஸ், சேவாபாரதி தொண்டர்களால் நல்லடக்கம் செய்யப்பட்டது

கன்னியாகுமரி மாவட்டம் கொல்லங்கோடு மண்டலத்தில் ஆர்.எஸ்.எஸ், சேவாபாரதி சார்பில் கொரோனா நோயாளிகள் தங்கி இருந்த இடங்களை சுத்தம் செய்யும் பணி நடைபெற்றது.





தேனி மாவட்டம் பெரியகுளம் சுற்று வட்டாரப் பகுதிகளில் ஆர்.எஸ்.எஸ், சேவாபாரதி சார்பாக கபசுரக் குடிநீர் வழங்கப்பட்டது.

தம்மம்பட்டி அரசு மருத்துவமனைக்கு கட்டில், மெத்தை, தலையணை, போர்வை வழங்கப்பட்டது.



உதகை மஞ்சனகொரை மயானத்தில் கொரோனா பாதிப்பால் மரணமடைந்தவர்களை அடக்கம் செய்து வரும் நீலகிரி சேவா கேந்திரம் தொண்டர்களின் சேவையை பாராட்டும் விதமாக உதகை ராமகிருஷ்ண மடத்தின் சுவாமிஜி ராகவேஷானந்தா மஹராஜ் மற்றும் சுவாமி திவ்யநாமானந்தா மஹராஜ் அவர்களை சந்தித்து ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கினார்.






திருச்சியில், திருச்சி மதுரை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள இந்திரா கணேசன் கல்லூரியில் 50 படுக்கைகளுடன்கொரோனா பாதித்தவர்களை தனிமைப்படுத்தும் முகாமை ஆரம்பித்தது திருச்சி மாவட்ட விஷ்வ ஹிந்து பரிஷத் அமைப்பு.

சேலம் சேவாபாரதி சார்பாக, இரவு பகலாய் அயராது பணிபுரியும் மயான ஊழியர்களுக்கு நிவாரண உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது.






ஆர்.எஸ்.எஸ் மற்றும் சேவாபாரதி தமிழ்நாடு சேலம் சார்பாக மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு கட்டில் படுக்கை தலையணைகள் 25 செட்கள் வழங்கப்பட்டன மேலும் ஆக்ஸிஜன் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

# முதல்வருக்கு பாலகுருசாமி கடிதம்



அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் சிறந்த கல்வியாளருமான பாலகுருசாமி, தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு, புதிய கல்விக் கொள்கையை தமிழகம் ஏன் அமல்படுத்த வேண்டும், எங்கெங்கு தவறான புரிதல் உள்ளது, அமலாக்கம் செய்யவில்லை என்றால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பது குறித்து கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அதில், புதியக் கல்விக் கொள்கையால் விளையும் நன்மைகள், அமல்படுத்தவில்லை எனில் மாணவர்கள் சந்திக்கப்போகும் சிக்கல்கள், அதன் முக்கியத்துவம், தேச வளர்ச்சியுடன் ஒருங்கிணைந்த தமிழக வளர்ச்சியின் முக்கியத்துவம், அடுத்தத் தலைமுறையினரின் எதிர்காலம், வேகமான உலக வளர்ச்சிக்கு ஏற்ப மாணவர்களை தயார் செய்ய வேண்டியதன் அவசியம் என பல்வேறு கருத்துகளை முன்வைத்துள்ளார்.

# விவசாய நேரடிப் பலன்களின் சாதனை

நடப்பு ரபி பருவ அறுவடை காலத்தில் மத்திய அரசு. குறைந்தபட்ச ஆதரவு விலையின் அடிப்படையில், முன் எப்போதும் இல்லாத அளவுக்கு 81 ஆயிரத்து 196 கோடி ரூபாய்க்கான கோதுமை கொள்முதலை விவசாயிகளிடம் இருந்து நேரடியாக வாங்கியுள்ளது. கடந்த ஆண்டின் மொத்த கொள்முதலுடன் ஒப்பிடுகையில், கோதுமை கொள்முதல் 5.44 சதவீதம் அதிகம். நாடு சுதந்திரமடைந்தப் பிறகு முதல் முறையாக, பஞ்சாபிலிருந்து விவசாயிகள் தங்கள் வங்கிக் கணக்குகளில் ரூ. 26,000 கோடிக்கு அதிகமாகவும், ஹரியானா விவசாயிகள் தங்கள் கணக்குகளில் ரூ. 16,700 கோடிக்கு அதிகமாகவும் நேரடியாக பெற்றுள்ளனர். இதனால், சுமார் 44.4 லட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர். நடந்து கொண்டிருக்கும் காரீஃப் 202021 பருவத்தில் நெல் கொள்முதல் சுமூகமாக தொடர்கிறது. கடந்த ஆண்டு 728.49 எல். எம்.டி வாங்கியதை விட கடந்த ஜூன் 2 வரையில் 799.74 எல்.எம். டிக்கு மேல் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. குறைந்தபட்ச ஆதரவு விலை அடிப்படையில், ஒரு லட்சத்து 50 ஆயிரத்து 990 கோடி ரூபாயை சுமார் ஒரு கோடியே 18 லட்சத்துக்கும் அதிகமான விவசாயிகள் வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பப்பட்டு அவர்கள் பயனடைந்துள்ளனர். ஆனால், இதனால் பலனடைந்த சில விவசாயிகளும்கூட அறியாமையால் சில இடைத்தரகர்களின் உத்தரவின் பேரில் மத்திய அரசு இயற்றிய மூன்று விவசாய சட்டங்களை எதிர்த்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.





# ஆறு அதிநவீன நீர்மூழ்கிக் கப்பல்



மத்திய அரசு ஊக்கு வித்து வரும் 'மேக் இன் இந்தியா' திட்டத்தின் கீழ் 'புராஜக்ட் 75 இந்தியா' என்ற பெயரில் அதிநவீன நீர்மூழ்கிக் கப்பல்களைத் தயாரிக்கும் திட்டம் குறித்து பரிசீலிக்கப்பட்டு வந்தது. சமீபத்தில், ரூ. 50 ஆயிரம் கோடி மதிப்புள்ள இத்திட்டத்துக்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்ற, ராணுவ தளவாடங்கள் கொள்முதல் கவுன்சில் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது. இதையடுத்து, மும்பையில் அரசுக்கு சொந்தமான மஸாகான் கப்பல் கட்டும் தளம் மற்றும் தனியார் நிறுவனமான எல் & டி நிறுவனத்துக்கு விரைவில் ஒப்பந்தம் அளிக்கப்படலாம் என செய்தி வெளியாகி உள்ளது. அதன்படி, இந்த இரண்டு நிறுவனங்களும் ரஷ்யா, பிரான்ஸ், ஜெர்மனி, ஸ்பெயின், தென் கொரியா ஆகிய 5 நாடுகளில் ஏதாவது ஒரு நாட்டின் நிறுவனத்துடன் தொழில் நுட்ப ஒப்பந்தம் மேற்கொண்டு அதன் அடிப்படையில் ஆறு அதிநவீன நீர்மூழ்கிக் கப்பல்களை பாரதத்திலேயே தயாரிக்கும்.

# பட்டியலினத்தவரை ஒதுக்கும் சர்ச்சுகள்



ஆப்கா கிறிஸ்தவ மதத்தில் ஜாதிகள் இல்லை என்று கூறிக்கொண்டு அப்பாவி பட்டியலினத்தவர்களை மதம் மாற்றுபவர்கள் அவர்களை எண்ணிக்கைக்கு மட்டுமே பயன்படுத்திக் கொண்டு அவர்களுக்கான உரிமைகளை மறுக்கும் கொடுமை கிறிஸ்தவ மதத்தில் பல காலங்களாக இருந்துவருகிறது. பட்டியலினத்தவர்களுக்கென குறிப்பிட்ட நாட்கள் மட்டும் அனுமதி, தனி இறுதி யாத்திரை வாகனம் என அனைத்திலும் அவர்கள் ஒதுக்கப்பட்டு வருகின்றனர். தமிழகத்தில், கிறிஸ்தவர்களில் பெரும்பான்மையானோர் பட்டியலினத்தவர்களாக இருக்கும் சூழலில், ஒரே ஒரு பட்டியலின பிஷப் மட்டுமே உள்ளார் என்பது அதிர்ச்சித் தரும் உண்மை. இதற்காக போராட்டங்களும் நடைபெற்றுள்ளன.

இந்நிலையில், சேலத்தில் பட்டியலின கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையாக உள்ள ஒரு மறைமாவட்டத்தில் கோரிக்கைகள் வைக்கப்பட்டும் பட்டியலினத்தவர் அல்லாத அருள்செல்வம் ராயப்பன் என்பவரை வாட்டிகன் பிஷப்பாக நியமித்துள்ளது. இந்த நியமனத்திற்கு தலித் மற்றும் பின்தங்கிய வகுப்புகளின் இந்திய கத்தோலிக்க பிஷப் மாநாட்டில் முன்னாள் செயலாளர் தேவசகாயராஜ் தனது அதிருப்தியை தெரிவித்துள்ளார். பிஷப் நியமனத்தில் வாரிசு அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படுவதாக தலித் கிறிஸ்தவ கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மேத்யூ குற்றம் சாட்டியுள்ளார். 'கடந்த 30 வருடங்களாக ஒரு பட்டியலினத்தவரை கிறிஸ்தவ பிஷப் ஆக நியமிக்க கோரிக்கை வைத்தும் மீண்டும் பட்டியலினத்தவர் அல்லாதவரை பிஷப்பாக நியமித்துள்ளது தங்களுக்கு பெரும் பின்னடைவு. இது குறித்து பலமுறை வலியுறுத்தி தேர்வுக்குழு மற்றும் பிற ஆயர்களுக்கு கடிதங்கள் எழுதியதற்கான ஆதாரங்கள் எங்களிடம் உள்ளது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக அதனை வாட்டிகன் பரிசீலனைகூட செய்யவில்லை' என தலித் கிறிஸ்தவ விடுதலை இயக்கத்தின் தலைவர் மேரி ஜான் தெரிவித்துள்ளார்.

# பசுமை ரயில்வே திட்டம்




சர்வதேச சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, இந்திய ரயில்வே வெளியிட்டுள்ள அறிக்கையில், '2023ம் ஆண்டுக்குள் அகல ரயில் பாதைகள் அனைத்தையும், 100 சதவீதம் மின்மயமாக்க திட்டமிடப்பட்டுள்ளது. வெப்பமயமாக்கலை தடுக்க ரயில்களின் இயக்கத்தில் நவீன தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்படும். பிரத்யேக சரக்கு ரயில் போக்குவரத்து தடங்களில் கரியமில வாயு வெளியேற்றத்தை குறைக்கவும், பசுமை சூழலை உருவாக்கவும் நவீன தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்திய ரயில்வேயின் 39 தொழிற்சாலைகள், 7 தயாரிப்புப் பிரிவுகள், 8 ரயில் பெட்டி பராமரிப்புக் கூடங்கள், ஒரு சரக்குக் கிடங்கு ஆகியவற்றுக்கு ஏற்கனவே 'பசுமை' சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. வரும் 2030க்குள், 'பூஜ்ய கரியமில வாயு வெளியேற்றம்' என்ற இலக்கை அடைய திட்டமிடப்பட்டு, அதற்கான பணிகள் முழு வேகத்தில் நடைபெற்று வருகின்றன.' என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக, உலகின் மிகப் பெரிய 'பசுமை ரயில்வே' என்ற சிறப்பை நமது இந்திய ரயில்வே பெறும் என எதிர்பார்க்கலாம்.

# டுவிட்டரை தடைசெய்ய வலுக்கும் கோரிக்கை




டுவிட்டர் நிறுவனத்தில் ப்ளூடிக் வசதி போலி கணக்கை குறைப்பதற்காக கொண்டு வரப்பட்ட ஒரு வசதி என கூறப்படும் நிலையில், பாரத துணை குடியரசுத் தலைவர் வெங்கையா நாயுடுவின் தனிப்பட்ட ட்விட்டர் கணக்கின் ப்ளூ டிக் வசதியை டுவிட்டர் நீக்கியுள்ளது. பிறகு எழுந்த பலத்த எதிர்ப்பால் ப்ளூ டிக் மீண்டும் நிறுவப்பட்டது. அவர் டுவிட்டரை அதிகமாக பயன்படுத்துவதில்லை என பொருத்தமற்ற ஒரு காரணத்தை டுவிட்டர் நிர்வாகம் கூறியுள்ளது. அது மட்டுமல்லாமல் ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பாகவத் உட்பட பல ஆர்.எஸ்.எஸ் மூத்த தலைவர்களின் கணக்குகளில் இருந்தும் ட்விட்டர் நிறுவனம் ப்ளூ டிக்கை நீக்கியுள்ளது. ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி சஞ்சய் தீக்ஷித், பல பா.ஜ.க ஆதரவாளர்கள், தலைவர்களின் கணக்குகளிலும் இந்த ப்ளூடிக் வசதி நீக்கப்பட்டுள்ளது. ஒரு சாராரை மட்டும் குறிவைத்து பாகுபாட்டுடன் நடந்து கொள்ளும் டுவிட்டரின் செயல்பாடுகள், சார்பு மனப்பான்மை, பாரத இறையாண்மையை மதிக்காமல் செயல்படுவது, அதன் சட்டதிட்டங்களை மீறுவது போன்ற டுவிட்டரின் தொடர் செயல்பாடுகளால், டுவிட்டரை நைஜீரிய அரசு தடை செய்ததுபோல நமது பாரத அரசும் உடனடியாக தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுத்துள்ளன.

# சாது சுந்தர் செல்வராஜ் மீது புகார் பதிவு



'ஜீஸஸ் மினிஸ்ட்ரிஸ்' என்ற அமைப்பை நிறுவி காவி உடையில் மக்களைக் குழப்பி மதம் மாற்றுவது, ஹிந்து மதத்தை இகழ்வது, போலி நம்பிக்கைகளை பரப்புவது என செயல்படுபவர் சாது சுந்தர் செல்வராஜ். சமீபத்தில் இவர், கொரோனா தடுப்பூசிகள் குறித்து பல போலியான தகவல்களை மக்களிடம் பரப்பினார். அதில், கொரோனா தடுப்பூசியில் சாத்தானின் சின்னம் உள்ளது, அதில் சிப் வைத்துள்ளனர் என்பது போல பல பொய்யான தகவல்கள் இடம் பெற்றிருந்தன. மேலும், அந்த வீடியோக்களில் ஹிந்து மதத்தினர், அப்பாவிகளையும் கிறிஸ்தவர்களையும் கட்டாயப்படுத்தி ஊசி போடவைப்பது போல சித்தரிக்கப்பட்டிருந்தது. இந்த வீடியோக்களை அவர் தன் சொந்த 'ஏஞ்சல் டி.வி' தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்தார். இது குறித்து அவர் மீது தற்போது புகார் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில், அப்பாவி மக்களிடம் தவறான பிரசாரங்கள் செய்து, அவர்களை தடுப்பூசி போட்டுக்கொள்ளாமல் தடுக்கும் செல்வராஜ் மீது குண்டர்கள் சட்டத்தில் வழக்குப் பதிவு செய்து சிறையில் அடைக்க வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

---

# ஆக்ஸிஜன் செறிவூட்டிகளுக்கு விலைக் கட்டுப்பாடு

மத்திய உரம் மற்றும் ரசாயனத் துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் தேசிய மருந்துகள் விலை நிர்ணய ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'உற்பத்தி விலையில் இருந்து 198 சதவீதம்வரை ஆக்சிஜன் செறிவூட்டிகள் மீது விலை நிர்ணயிக்கப்படுவதால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். அசாதாரண சூழலில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் அதிகாரத்தின் கீழ், இந்த விலை நிர்ணயக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஆக்சிஜன் விற்பனையாளர்கள், விநியோகஸ்தர், மருத்துவமனை, விற்பனை செய்யும் நிறுவனங்கள், முகவர்கள் தாங்கள் விற்பனை செய்யும் ஆக்சிஜன் செறிவூட்டிகளின் விலை விவரத்தை அதன் மீது ஒட்ட வேண்டும். மீறும் நிறுவனம் மீது 100 சதவீத அபராதம் விதிக்கப்படும். விலை நிர்ணயத்தை மாநில மருந்து கட்டுப்பாட்டு அமைப்புகள் கண்காணிக்க வேண்டும்' என கூறப்பட்டுள்ளது.



# டுவிட்டருக்கு இறுதி அவகாசம்

புதிய தகவல் தொழில்நுட்பச் சட்ட விதிகள், 2021 க்கு இணங்க மத்திய அரசு சனிக்கிழமை சமூக ஊடக நிறுவனமான டுவிட்டருக்கு இறுதி நோட்டீஸை வழங்கியுள்ளது. மற்ற அனைத்து சமூக ஊடக நிறுவனங்களும் புதிய விதிகளை செயல்படுத்த ஒப்புக்கொண்ட நிலையில் டுவிட்டர் இன்னமும் முரண்டு பிடித்து வருகிறது என்பதும் புதிய விதிமுறைகளுக்கு இணங்க சமூக ஊடக நிறுவனங்களுக்கு ஏற்கனவே 3 மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. 2021 மே 26 முதல் இந்த விதிகள் நடைமுறைக்கு வந்திருந்தாலும், நல்லெண்ண அடிப்படையில் டுவிட்டர் உடனடியாக இந்த விதிகளை செயல்படுத்த கடைசி அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது, டுவிட்டர் இதனை நிறைவேற்ற தவறும்பட்சத்தில், தகவல் தொழில்நுட்ப சட்டத்தின் 79 வது பிரிவின் கீழ் கிடைக்கும் சலுகைகள் நிறுத்தம், பாரதத்தின் தகவல் தொழில்நுட்பச் சட்டம் மற்றும் பிற தண்டனைச் சட்டங்களின்படி விளைவுகளுக்கு டுவிட்டர் பொறுப்பேற்க வேண்டும்.



# சீரம் நிறுவனத்திற்கு அனுமதி

ரஷ்யாவின் ஸ்புட்னிக் வி தடுப்பூசியை, இந்தியாவில் அவசரகால பயன்பாட்டிற்கு உபயோகிக்க, மத்திய அரசு அனுமதி வழங்கியது. இந்த தடுப்பூசிகள் தற்போது இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன. இந்நிலையில், பாரதத்திலேயே இந்த ஸ்புட்னிக் வி தடுப்பூசிகளை பரிசோதனை செய்து தயாரிப்பதற்காக, சீரம் நிறுவனம் அனுமதி கோரியிருந்தது. அதற்கு, இந்திய மருந்துகள் கட்டுப்பாட்டு அமைப்பு ஒப்புதல் அளித்தது. மஹாராஷ்டிராவின் புனேவில் உள்ள ஹதப்சார் மையத்தில், இந்த ஸ்புட்னிக் வி தடுப்பூசிகள் விரைவில் தயாரிக்கப்பட உள்ளன.





# வேகமாக உருகும் பனிப்பாறைகள்

புவி வெப்பமடைதல் காரணமாக கடந்த 2000 முதல் ஐஸ்லாந்தின் பனிப்பாறைகளில் சுமார் 750 சதுர கிலோமீட்டர் பரப்பை இழந்துள்ளன என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்த நிலை நீடித்தால் வரும் 2200ம் ஆண்டுக்குள் ஐஸ்லாந்தின் பனிப்பாறைகள் முற்றிலுமாக மறைந்து போகும் அபாயம் இருப்பதாக நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். 1890 முதல், பனிப்பாறைகளால் சூழப்பட்ட ஐஸ்லாந்து நிலம் கிட்டத்தட்ட 2,200 சதுர கிலோமீட்டராக இருந்தது. தற்போது அது 18 சதவீதம் குறைந்துள்ளது. அதுவும், பனிப்பாறைகளின் இழப்பு கடந்த 20 ஆண்டுகளில் மூன்றில் ஒரு பங்கு எனும் அளவுக்கு வேகமாக நடந்துள்ளது என பனிப்பாறை வல்லுநர்கள், புவியியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# ஆப்பிள் நிறுவன பரிசு வென்ற அபினயா



ஆப்பிளின் வருடாந்திர உலகளாவிய டெவலப்பர்கள் மாநாடு (WWDC) நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக இந்த ஆண்டு நடைபெற்ற 'ஸ்விஃப்ட் மாணவர் சவால்' என்ற போட்டியில் வென்ற 350 வெற்றியாளர்களில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அபினயா தினேஷ் எனும் 15 வயதான சிறுமியும் ஒருவர். இந்த போட்டியில் குழந்தைகள் தங்கள் கோடிங் திறனை வெளிப்படுத்தி பரிசை வெல்வர். அமெரிக்காவின் நியூ ஜெர்சியில் உள்ள நார்த் பிரன்சுவிக் நகரில் வசிக்கும் அபினயா தினேஷுக்கு கடந்த ஆண்டு இடுப்பு கால் கோளாறு (pelvic foot disorder) இருப்பது கண்டறியப்பட்டது. அதனை குறித்த மருத்துவ தகவல்கள், அதில் இருந்து எப்படி மீள்வது என்று அபினயாவுக்கு மருத்துவர்கள் சரியாக விளக்கவில்லை. இதனால், அவர், இந்த கோளாறுகள் குறித்த தகவல், ஆதாரங்களை அணுகுவதற்கான வழியை அனைவரும் அறியும் விதத்தில் 'Gastro at Home' என்ற 'பயன்பாட்டை' தானே உருவாக்கினார். இன்னும் சில நாட்களில் ஆப் ஸ்டோரில் இந்த பயன்பாட்டை வெளியிடவும் அவர் திட்டமிட்டுள்ளார். இதோடு மட்டுமில்லாமல், அபிநயா தனது சொந்த லாப நோக்கற்ற 'இம்பாக்ட் ஏஜ' என்ற நிறுவனத்தையும் நடத்திவருகிறார். இது இளைஞர்களிடையே செயற்கை நுண்ணறிவு (AI) கற்றல் நடைமுறைகளை கற்றுக்கொள்ள ஊக்குவிக்கிறது. அபிநயா தனது உயர்நிலைப் பள்ளி பட்டப்படிப்புக்குப் பிறகு மருத்துவம் அல்லது கணினி அறிவியலில் பட்டம் பெற விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

# உலகம் தலைகீழாக போகிறது



கனடாவில் வசிக்கும் கேரளாவை சேர்ந்தவர் புகைப்பட கலைஞரான தாமஸ் விஜயன். இவர் சமீபத்தில் எடுத்த புகைப்படத்தில் ஓராங்குட்டான் ஒன்று மரத்தை அணைத்தப்படி தலைகீழாக தொங்கிக்கொண்டு இருப்பதுபோல் இருக்கிறது. அதற்கு மேலே, மரத்தின் இலைகள், வானம் தெரிகின்றன. 'உலகம் தலைகீழாகப் போகிறது' என்று பெயரிடப்பட்ட இந்தப் புகைப்படத்துக்கு நேச்சர் டி.டி.எல் என்ற சர்வதேச அமைப்பு 2021ம் ஆண்டுக்கான சிறந்த புகைப்படக் கலைஞருக்கான விருதை வழங்கியுள்ளது. இந்தப் புகைப்படம் பார்ப்பவரை ஒரு கணம் குழப்பத்துக்குள்ளாக்கும். இந்த புகைப்படத்தில் ஒராங்குட்டான் தலைகீழாக தொங்கிக்கொண்டிருப்பது போல் தோற்றம் தரும். ஆனால், ஒராங்குட்டான் தலைக்கீழாக தொங்கவில்லை. மரத்தின் இலைகளும், வானமும் நீரில் பிரதிபலிக்கின்றன. போர்னியா தீவிற்கு சென்றபோது அவர் இதனை புகைப்படமாக்கியுள்ளார். 8,000 க்கு மேற்பட்ட படங்கள் இடம்பெற்ற அந்தப் போட்டியில், தாமஸ் விஜயனின் இந்தப் புகைப்படம் விருது பெற்றுள்ளது. 1,500 பவுண்ட் விருதுத் தொகையாக அவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

# காங்கோவில் மூன்றாவது அலை



காங்கோ சுகாதாரத்துறை அமைச்சர் ஜின், 'காங்கோவில் கரோனா மூன்றாவது அலை பரவி வருகிறது என்பதை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கிறோம். அதிக மக்கள் தொகை கொண்ட தலைநகர் கின்ஷாசாவில் கரோனா அதிகம் பரவி வருகிறது. தற்போது கின்ஷாசா கரோனாவின் மையமாக உள்ளது. கரோனா தடுப்பூசிகளை மக்களுக்கு குறைவாக செலுத்தி வருவது, கரோனா விதிமுறைகளை மக்கள் முறையாக பின்பற்றாமல் இருப்பதே இந்த மூன்றாவது அலை பரவலுக்கு காரணம்" என தெரிவித்துள்ளார். காங்கோவில் கடந்த 24 மணி நேரத்தில் 183 பேர் கரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆப்பிரிக்கக் கண்டத்தில், தென் ஆப்பிரிக்கா, மொராக்கோ, துனிசியா, எத்தியோபியா, எகிப்து போன்ற நாடுகள் கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. அங்கு இதுவரை 1.7% மக்களுக்கு மட்டுமே கரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# சிக்கும் சீனா



கடந்த ஆண்டு மே மாதம் சீனாவின் மக்கள் விடுதலை ராணுவத்தில் பணியாற்றிய ராணுவ விஞ்ஞானி ஜாவ் யூசென் மர்மமான முறையில் இறந்தார். ஆனால், அவர், இன்றுள்ள கொரோனா நோய்க்கான தடுப்பூசிக் காப்புரிமைகோரி கடந்த 24 பிப்ரவரி 2020 அன்று விண்ணப்பித்துள்ளார் என புதிய தகவல் வெளியாகியுள்ளது. அதாவது, கொரோனா எனும் தொற்று உலகிற்கு வெளிப்படும் முன்னதாகவே அவர் அதனை ஆராய்ந்து அதற்கு ஒரு தடுப்பு மருந்து கண்டுபிடித்துள்ளார் என்பது இதனால் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. அவர் அந்த பெயரிடப்படாத கிருமி குறித்த ஆராய்ச்சிகளுக்கு சீன தேசிய சுகாதார நிறுவனங்களிலிருந்து பணம் பெற்றுள்ளார். விருது பெற்ற ராணுவ விஞ்ஞானியாக ஜாவ் யூசென் இருந்தபோதிலும், அவரின் மர்மமான இறப்பு குறித்தோ அல்லது அவருக்கு நடத்தப்பட்ட அஞ்சலி குறித்தோ எந்த அறிக்கையுமில்லை. கொரோனா வைரஸின் மனிதனுக்கு மனிதனுக்கு பரவுவதை சீனா ஒப்புக் கொண்ட ஐந்து வாரங்களிலேயே இந்த காப்புரிமை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சீனாதான் கொரோனா நோய்க்கு காரணம், அதன் ஊஹான் ஆய்வகத்தில் இருந்துதான் அது வெளியானது என்று உலக நாடுகள் குற்றம் சாட்டியுள்ள சூழலில், இந்த சர்ச்சைக்குரிய அறிக்கை சீனாவை மேலும் ஒரு இக்கட்டில் தள்ளியுள்ளது.

# வல்லவர் யார்?

தரையில் எறும்பு மெல்ல ஊர்ந்து சென்று கொண்டிருந்தது. அப்போது ஒரு பூரான் அதன் அருகே வந்து, "நண்பா! நான் வருவதைக் கூடக் கவனிக்காமல் எங்கே சென்று கொண்டிருக்கிறாய்?" என்று எறும்பிடம் கேட்டது.

எறும்பு "பூரான் நண்பா! உன்னைக் கவனித்துக் கொண்டிருந்தால் என் கடமையை நான் சரிவரச் செய்ய முடியாதே" என்று ஊர்ந்து கொண்டே சொன்னது.

"அப்படியென்ன முக்கியமான கடமை?" கேட்டது பூரான்.

எறும்பும் ஊர்ந்துக் கொண்டே, "மழைக்காலத்திற்குத் தேவையான உணவை, வெயில் காலத்திலேயே தேடிச் சேர்ப்பது என் கடமை. உன்னிடம் பேசினால் என் கடமையைச் செய்ய முடியாது" என்று கூறிச் சென்று விட்டது.

எறும்பை மட்டம் தட்டியே தீர வேண்டும் என்று நினைத்தது பூரான்.

அடுத்த நாள் எறும்பு வரும் வழியில் நின்று வழி மறித்தது. "கடமையை சரிவரச் செய்வதால் மட்டும் நீ வல்லவனாக முடியாது. உன்னால் என்னைப் போல வேகமாக ஊர்ந்து வர முடியுமா? அப்படி வந்தால் நீ வல்லவன் என்று ஒத்துக் கொள்கிறேன்" என்று கேட்டது.

அதற்கு எறும்பு "வீண் பேச்சு வேண்டாமே. நான் என் கடமைச் செய்ய விடேன்" என்று பணிவாகக் கேட்டது.

பூரான் "தப்பித்து ஓடப் பார்க்காதே!" என்று கேலி செய்தது.

அதற்கு எறும்பு அமைதியாக "உன் அளவுக்கு வேகமாக என்னால் ஊர முடியாது. ஆனால், நான் செய்யும் சிலவற்றை உன்னால் செய்ய முடியாது. அதனால் யார் வலியவன் என்ற பரிட்சையெல்லாம் வேண்டாம்" என்று கூறியது.

பூரானோ "அப்படி என்ன நீ சாகசம் செய்துவிடுவாய்" என்று கேட்டது.

எறும்பு, பூரானை ஒரு தண்ணீர் தொட்டியின் அருகில் அழைத்துச் சென்றது. பூரானை வேடிக்கை பார்க்கச் சொல்லி விட்டு கரையின் அருகில் இருந்த ஒரு துரும்பில் தொற்றிக்கொண்டு தண்ணிரில் விழுந்து அந்த துரும்பைப் பற்றிக் கொண்டு தண்ணீரில் மிதந்தது. "உன்னால் இப்படிச் செய்து காட்ட முடியுமா?" என கேட்டது.

பூரானுக்கு அப்போதுதான் எல்லோருக்கும் சில வல்லமைகளும் சில இயலாமைகளும் இயற்கையிலேயே உண்டு என்று புரிந்தது. எறும்பிடம் மன்னிப்புக் கேட்டது.

எஸ். கோகுல்

